# என்னை நினைவுகூரும்படி

## என்னை நினைவுகூரும்படி (லூக் 22:19)




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமக்காக நம்மிடம் கேட்ட காரியம் ஒன்று உண்டானால் அது மேற்கூறப்பட்டபடி அவரை நினைவுகூரும்படி அவர் சொன்னதே ஆகும். ஆண்டவர் சுவிசேஷத்தை அறிவிக்க, சீஷராக்க என பல கட்டளைகளை நமக்கு கொடுத்திருந்தாலும், அவர் தமக்காக நம்மிடம் கேட்ட ஒரு காரியம் உண்டானால அது அவரை நினைவுகூரும்படி சொன்னதே ஆகும்.

சகலத்தையும் படைத்து ஆளும் தேவனுக்கு நாம் கொடுக்க கூடிய / செய்யகூடிய ஒரே காரியம் அவரை நினைவுகூருவது ஆகும். நம்மோடு மிக நெருக்கமாக, ஐக்கியமாக இருப்போரை பற்றி மட்டுமே நம்முடைய இருதயம் / சிந்தை நினைவில் வைத்திருக்கும். எப்பொழுதோ ஒரு முறை பார்ப்பவரை, அவரை காணும்போது மட்டும்தான் அவரை பற்றி எண்ணி அவரை விசாரிப்போம். ஆனால் நமக்கு அன்புக்குரியவர்கள் பற்றிய சிந்தையோ நம்முள் எப்பொழுதும் இருக்கும். அதுபோல, ஆண்டவரோடு நமக்கு ஒரு ஐக்கியம் இருக்குமானால் அவர் படைத்து இருக்கும் இயற்கை, நம் வாழ்வில் / பிறர் வாழ்வில் நடைபெறும் அற்புத செயல்கள் ஆகிய இவை ஒவ்வொன்றை பார்க்கும்பொழுதும், தேவனுடைய கிரியையை நாம் நினைவுகூருவோம்.

**ஆண்டவருக்கு பிரியமற்ற காரியத்தை செய்ய முற்படும் பொழுது, அவரை பற்றிய சிந்தை நமக்கிருக்குமானால், நம்மால் பாவம் செய்ய முடியாது. நினைவுகூருதல் என்பது ஏதோ மறந்ததை நினைவில் கொண்டு வருவதாக இல்லாமல், நம் மனதில் ஆழ பதிந்திருப்பதை ஒவ்வொரு நேரமும் நினைவுகூருவதே ஆகும். நம் மனதில் பதிந்திருக்கும், தேவ வார்த்தைகள், அவருடைய வாக்குத்தத்தங்கள் இவை ஒவ்வொன்றையும் நினைவுகூர்ந்தால் நம் வாழ்வு செம்மையானதாய் காணப்படும். வேண்டாத சிந்தனைகள் எழாது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவரிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பின் ஆழம் நாம் அவரைப் பற்றி கொண்டுள்ள நினைவின் மூழமாகவே வெளிப்படும்.** நாம் அவரை பற்றிய சிந்தையுள்ளவர்களாய் இருப்பதனால், மற்ற மனிதர்கள் நம்மை காணும்பொழுது அவர்களுக்கு கிறிஸ்துவை பற்றிய சிந்தை உண்டாகும்படி நம்முடைய வாழ்வு காணப்படும்.

கிறிஸ்து நம்முள் இருக்கிறார் என்பதை பிறர் அறிய வேண்டும். நம்முடைய அகத்தில் தேவன் இருப்பாரானால், நம்முடைய புறத்தில் அது வெளிப்பட்டே தீரும். ஆண்டவருடைய பிரசன்னத்தில் இருந்த மோசேயின் முகம் பிரகாசித்தது. ஆனால் அதை காட்டிலும் அதிகமாக கிறிஸ்து தம்மை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே அதைப் பற்றிய உணர்வு / நினைவு நிச்சயமாகவே பிறர் காணும் விதமாய் நம்மில் வெளிப்பட வேண்டும். ஆண்டவரைப் பற்றிய உணர்வு / நினைவு உள்ளவர்கள், நிச்சயமாகவே நித்திய வாழ்வு, இரட்சிப்பு, பாவம், உயிர்தெழுதல் ஆகிய காரியங்களை பற்றியும் உணர்வுள்ளவர்களாய் இருப்பார்கள். அவரைப் பற்றிய சிந்தையும், நினைவும் எந்த அளவிற்கு அதிகமாகிறதோ, அந்த அளவிற்கு, பூரண புருஷராகும்படி கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு ஏற்ப நாம் வளர்ச்சியடைவோம். அவரைப்பற்றிய நினைவு நாம் அவரையே சார்ந்திருக்க செய்யும். சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், யார் என்ன பேசினாலும், யாரிடம் போவோம் ஆண்டவரே என்று பேதுரு கூறியபடி, அவரையன்றி நமக்கு வேறொரு கதியும் இருக்காது. கிறிஸ்துவை பற்றிய சிந்தை மட்டுமில்லாமல், கிறிஸ்துவின் சிந்தையே **(பிலி 2:5)** நம்முள் காணப்பட கர்த்தர் தாமே கிருபை செய்வாராக. ஆமென், அல்லேலூயா.